நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 24/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஷ்வரி |
| தந்தை / கணவர் பெயர் | : | பாண்டுரங்கன் |
| கிராமம் | : | ஆஸ்பத்திரி காலனி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 26–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.30 PM)

1. நான் தற்போது மேட்டூர் ஆஸ்பத்திரி காலனி அருகே குடியிருக்கிறேன். மேட்டூரிலுள்ள முனியப்பன் கோவிலில் மிட்டாய் கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய மகன் பெயர் ரேவதி. ஆஜர் எதிரி என்னுடைய

மருமகன். ஆஜர் எதிரி எனது மகளுடன் அடிக்கடி பிரச்சனை செய்து, அடித்து என்னுடைய வீட்டிற்கு அனுப்பி வைத்துவிடுவார்.

2. ஆஜர் எதிரி என் மகளை கொன்றுவிட்டார். என்னுடைய மகள் இறப்பதற்கு முன்பாக இரண்டு குழந்தைகளுடன் என்னுடன் வந்து இருந்துக்கொண்டு முனியப்பன் கோவில் அருகே அவரும் மிட்டாய் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார்.

3. ஆஜர் எதிரி மற்றொரு பெண்ணான சங்கீதாவுடன் இருந்தார். சென்ற வருடம் 7 வது மாதம் 13 ம் தேதி கோயிலில் விஷேசம் எதுவும் இல்லாததால் எனது மகளை வீட்டிற்கு சென்று குழந்தைகளை பார்த்துக்கொள் என்று அனுப்பிவைத்துவிட்டு, நான் கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன்.

4. அன்றைய தினம் காலை 11–11.15 மணியளவில் ஆஜர் எதிரி ஒரு பெண்ணுடன் வந்து என்னை பார்த்து ஜாடைமாடையாக பேசினார். தேவடியா, கண்டாரஓலி என்று என்னை பொதுஇடத்தில் வைத்து திட்டினார். நான் எதிரியை பார்த்து எதற்காக கெட்டவார்த்தையால் திட்டுகிறாய் என்றுக்கேட்டேன்.

5. திடீரென எதிரி அவருடைய பைக்கை ஓட்டிவந்து என்னுடைய டேபிள் மீது இடித்தார். அவர் மோதியதால் பின்னாடி இருந்த சுவற்றில் மோதிவிட்டேன். நான் எழுந்தபோது எதிரி என்னை கண்டாரஓலி, தேவடியா என்று திட்டி, எனது சேலையை பிடித்து இழுத்து தலை, முகம், நெஞ்சு ஆகிய இடங்களில் அடித்தார். நான் விற்பனைக்காக வைத்திருந்த மிட்டாயை எடுத்து என் மீது வீசினார்.

6. நான் எடைபோட வைத்திருந்த ½ கிலோ இரும்பு எடைக்கல்லை என்மீது வீசினார். அதில் என் உயிர்நாடியின் மீது பட்டு நான் கீழேவிழுந்துவிட்டேன். எதிரி " இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னையும், உன் குடும்பத்தையும் கொல்லாமல் விடமாட்டேன் " என்று மிரட்டினார்.

7. நான் சத்தம்போடுவதை கேட்டு அருகிலிருந்தவர்கள் வந்தார்கள். அவர்கள் வருவதை பார்த்து என்னை மீண்டும் அதே கெட்டவார்த்தையால் திட்டி,

பைக்கை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அருகிலிருந்தவர்கள் எனக்கு தண்ணீர் கொடுத்துஉதவி செய்தார்கள். நான் என்னுடைய தொலைபேசியில் இருந்து என்னுடைய கணவருக்கு நடந்த விசயங்களை சொன்னேன். என் கணவர் வந்து என்னை மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்.

8. நான் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் மருத்துவமனை வந்து என்னை விசாரித்தனர். நான் நடந்ததை சொன்னேன். போலீசார் எழுதிக்கொண்டு என்னிடம் படித்துகாண்பித்தார்கள். சரியாக இருந்தது. நான் கைரேகை செய்தேன். புகார் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

9. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் இந்த எடைபோடும் இரும்பு எடைக்கல்லால் தான் எதிரி என்னை அடித்தார். அது ½ கிலோ இரும்பு எடைக்கல்லாகும். ( **½ கிலோ இரும்பு எடைக்கல் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** படிவம் 95 ல் உள்ள கைரேகை என்னுடையதுதான். **(படிவம் 95 ல் உள்ள கைரேகை அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

10. நான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்து போலீசார் என்னை விசாரித்தனர். சுமார் 4–5 நாட்கள் கழித்து எதிரி என்னை அடிக்க பயன்படுத்திய சா.பொ.1 ஐ காவல் துறையினரிடம் ஒப்படைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவதன்று எனது மகள் என்னுடன் கடைக்கு வரவில்லை. நான் மட்டும் தான் சம்பவயிடத்தில் இருந்தேன். எனது மகளும், ஆஜர் எதிரியும் பிரிந்து வாழ்வதாக ஒரு ஆவணம் எழுதிக்கொண்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி தன்னுடைய வீட்டை எனது மகள் பெயருக்கு எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியும்.

2. அந்த ஆவணத்தில் நீதிமன்றத்தை அணுகி முறைப்படி விவகாரத்தைப் பெற்றுக்கொண்டு பிரிந்து வாழ்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி எந்த சொத்தையும் எனது மகளுக்கு தரமாட்டேன் என்றும், தனக்கு கையெழுத்து போட்டு தரவேண்டும் எனவும், எனது பிள்ளைகளுக்கு சொத்துவேண்டும் என்றும், வீடு வேண்டும் என்றும் சொன்னார்.

3. மேற்படி எழுதிக்கொடுத்த உறுதிமொழி ஆவணத்தில் விவாகரத்து பெற்றபிறகு ஜீவானம்சம் கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதினார்கள். ஆனால் எதுவும் கொடுக்கவில்லை. இந்த சம்பவம் காலை 11.15 மணிக்கு நடைபெற்றது. அதன்பிறகு ½ மணிநேரத்தில் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றுவிட்டேன்.

4. இந்த கடை வைத்துத்தான் பிழைக்கிறீர்கள் உங்களை என்ன செய்கிறேன் பார் என்று மிட்டாய்கடை, டேபிள் எல்லாம் எடுத்து ஆற்றில் கொண்டுபோய் வீசிவிட்டார். எதிரி என்னை அடிக்கும்போது அருகிலிருந்தவர்கள் யாரும் வந்து தடுக்கவில்லை. சத்தம்கேட்டு அக்கம்பக்கத்தினர் வந்தவுடன் என்னை மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்.

5. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என்னை மறுநாள் தான் காவல் துறையினர் வந்து விசாரித்தனர் என்றால் சரிதான். மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் சம்மந்தமாக எப்போது வழக்கு பதிவுசெய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

6. நான் புகார்வாக்குமூலம் கொடுத்ததற்கு ரசீது எதுவும் எனக்கு கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகாரில் உண்மையில்லை என்பதற்காகத்தான் காவல் துறையினர் வழக்கு செய்யாமல் இருந்தார்கள் என்றாலும், அதன்பிறகு பணம் பலத்தினால் நான் கொடுத்த அழுத்தத்தின் பேரில் 7 வது மாதம் கொடுத்த புகாருக்கு 10 வது மாதம் தான் வழக்கு பதிவுசெய்தார்கள் என்றாலும் சரியல்ல. எதிரியை பிடித்துவிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்வதாக சொல்லி

யாருமே எதிரியை பிடிக்கவில்லை.

7. முனியப்பன் கோவில் அருகில் கோவிலுக்கு போகும் சந்து அருகில் மிட்டாய் கடை வைத்துள்ளேன். எனது கடை சந்தில் உள்ளது. கடையில் இருந்து வெளியில் வந்து திரும்பும்போதுதான் உணவகங்கள் உள்ளது. தற்போது 1 மாதமாகத்தான் மீண்டும் கடை வைத்து நடத்திவருகிறேன்.

8. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 13.07.2024 ம் தேதி எதிரி ஏற்காட்டில் உள்ள ஒரு ே ஹாட்டலில் தங்கியிருந்தார் என்றாலும், நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடந்திருக்க வாய்ப்பே இல்லை என்றாலும் சரியல்ல.

9. எனது மகளும், ஆஜர் எதிரியும் நல்ல முறையில்தான் வாழ்ந்து வந்தார்கள் என்றாலும், எதிரி லாரி டிரைவராக வேலை செய்து சம்பாதித்து எனது மகளை நல்லமுறையாகத்தான் வைத்திருந்தார் என்றாலும், நான் தான் அவர்களது குடும்பத்தில் பூசல்களை ஏற்படுத்தி பிரச்சனை ஏற்படுத்தினேன் என்றாலும் சரியல்ல.

10. 13.07.2024 ம் தேதி எதிரி நான் சொல்லும் பெண்ணுடன் ஏற்காட்டில் தங்கியிருப்பது எனக்கு தெரிந்துதான் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக சொல்லி பொய் புகார் அளித்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி சம்பவத்தின்போது நான் மிட்டாய் கடையில் இருந்தபோது அருகில் வந்து மிரட்டினார்களா என்றால் வண்டியை கொண்டுவந்து எனது கடையில் மோதிவிட்டு அதன்பிறகு என்னை மிரட்டினார்.

11. காவல்துறை விசாரணையில் வண்டியை கொண்டுதான் எனது கடையில் மோதியதாக நான் சொன்னேன். நான் எனது கடை டேபிள்களை ஆற்றில் போட்டதாக சொன்னது என்னை தாக்கியதற்கு சுமார் 3 மாதங்கள் முன்னாடி நடந்த சம்பவம். இந்த சம்பவத்தின் போது எனது கடை டேபிளை எதிரி ஆற்றில் எடுத்துக்கொண்டு போடவில்லை.

12. 2 மாதங்களுக்கு முன்னால் நடந்த சம்பவத்திற்கு நான் புகார் கொடுக்கவில்லை.

எனது மகளுக்காக வேண்டி புகார் கொடுக்காமல் விட்டுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் எடைகல்லை எடுத்து என்னை நோக்கி எதிரி வீசினார். அது எனது சிறுநீர் கழிக்கும் பகுதியில் பட்டது. அதனால் காயம் ஏற்படவில்லை. அதனால் டியூப் வைத்துதான் சிறுநீர் கழித்தேன்.

13. எதிரி என்னை கல்லாலும், மிட்டாய்களாலும், கைகளாலும் தாக்கினார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அதனால் தான் மேட்டூர் அரசு மருத்துவமனையில் குறிப்பாக எனக்கு எந்த வெளிப்புற காயமும் இல்லையெனவும், எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் எனவும் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றாலும், நான் சொன்னவாறு எதிரி என்னை தாக்கவில்லை என்றாலும் சரியல்ல.

14. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்பதால்தான் மருத்துவ ஆவணங்களில் சம்பவம் காலை 10.00 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிட்டிருந்தோம். காலை 11.15 க்கு சம்பவம் நடைபெற்றதாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாட்ச் கட்டிக்கொள்வதில்லை. எனக்கு நேரம் சரியாக தெரியாது.

15. நான் எனக்கு இருந்த உடல் உபாதைகளுக்குதான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்றேன் என்றாலும், நான் சொன்னவாறு எதிரி ஆக்ரோஷத்துடனும், ஆத்திரத்துடனும் தாக்கியிருந்தால் எனக்கு கட்டாயம் வெளிப்புறக்காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல.

16. 18.03.2023 ம் தேதி பிரிந்து வாழ்வதாக எனது மகளும், எதிரியும் ஒப்புக்கொண்டு உறுதிமொழி ஆவணம் எழுதிக்கொண்டு பிரிந்துவிட்டார்கள் என்றாலும், அதன்பின்னிட்டு எதிரியை பழிவாங்கும் எண்ணத்தில் நானும், எனது மகளும் ஒன்றுசேர்ந்து நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி பொய் புகார் அளித்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை அடித்துவிட்டுதான் எதிரி ஏற்காடு சென்றார்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(04.40PM)

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.